பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

31 12 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- 2024-ஆம் ஆண்டில் இந்திய விண்வெளித்துறை ஆதித்யா-
- எல்-ஒன், ஸ்பாடெக்ஸ் தொழில்நுட்பம் உள்ளிட்ட வியக்கத்தக்க சாதனைகளைப் படைத்துள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
- தமிழகதில் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் அதிக அளவில் திருக்குறளை பயன்படுத்த வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
- 2025 ஆங்கில புத்தாண்டு இன்று நள்ளிரவு பிறக்கிறது.
- தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நடப்பு ஆண்டு 33 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
- விஜய் ஹஸாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் விதர்பா அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

[]<<<>>>[]

2024-ஆம் ஆண்டில் இந்திய விண்வெளித்துறை பல சாதனைகளைப் படைத்துள்ளதாக மத்திய விண்வெளி மற்றும் அணுசக்தித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2024- புத்தாண்டு தினத்தன்று சூரியனை ஆய்வு செய்வதற்காக
ஆதித்யா-எல்-ஒன் விண்வெளி பயணத் திட்டம் தொடங்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முதலாவது தேசிய விண்வெளி தினம் கொண்டாடப்பட்டதையும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று விண்வெளியில் செயற்கைக் கோள் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஸ்பாடெக்ஸ் திட்டத்திற்கான இரண்டு செயற்கைக் கோள்கள் நேற்று விண்ணில் செலுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

விண்வெளியில் செயற்கைக்கோள் பராமரிப்புக்கான மையத்தை அமைக்கும் தொழில்நுட்பத்தை இந்தியா முதல் முறையாக இந்த ஆண்டு இறுதியில் பயன்படுத்தி இருப்பதாகவும் அவர் கூறினார்.

ககன்யான் திட்டத்திற்கும், இந்திய விண்வெளி ஆய்வகத்திற்கும் பேருதவியாக ஸ்பாடெக்ஸ் திட்டம் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு தொழில்நுட்பத்தில் இந்த திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் பல சாதனைகளை படைத்து வரும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகளுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் திரு ஜிதேந்திரசிங் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் அதிக அளவில் திருக்குறளை பயன்படுத்த வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலைக்கான வெள்ளிவிழா வளைவுக்கு அடிக்கல் நாட்டியதுடன், திருக்குறள் ஓலைச்சுவடிகள், புத்தகங்கள், மின் நூல்கள், மற்றும் திருவள்ளுவர் சிலை தொடர்பான புகைப்பட கண்காட்சியை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் திருக்குறளை மேம்படுத்துவதற்கான சில அறிவிப்புகளையும் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) -63----- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் வரும் ஆண்டு பிப்ரவரி மாதம் விழிப்புணர்வு மாநாடு நடத்தப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மாநில சுற்றுச்சூழல்துறை இயக்குநர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், இளைஞர்களை சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கு தயார் செய்யும் நோக்கில் அவர்களுக்கான Mascot design contest என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

மேலும் ஐந்து பேருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் ஆறுதல் பரிசாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.,

இப்போட்டிகளில் பங்குபெற விரும்புவோர் மாநில அரசின் சுற்றுச்சூழல்துறை இணையதளமான environment.tn.gov.in மஎன்ற முகவரியில் ஜனவரி பத்தாம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டுமென்றும் அந்த செய்திக்குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

2024-ஆம் ஆண்டுக்கு விடைகொடுத்து 2025- ஆங்கில புத்தாண்டு இன்று நள்ளிரவு பிறப்பதையொட்டி புத்தாண்டை வரவேற்க மக்கள் தயாராகி வருகின்றனர்.

புத்தாண்டை வரவேற்கும் விதமாக சிறப்பு கொண்டாட்டங்களும் நள்ளிரவு நடைபெறுகின்றன.

புத்தாண்டையொட்டி தேவாலயங்களில் நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவாலயங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

கோவில்களிலும் சிறப்பு பூஜைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பாட்டுள்ளன.

புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மெரினா கடற்கரையில் நள்ளிரவு மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படும் என்பதால் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சென்னை மெரினா, பெசண்ட்நகர் எலியட்ஸ் கடற்கரை பகுதிகளில் மக்கள் கடலில் இறக்குவதற்கும், குளிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அசம்பாவிதங்களை தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதேபோன்று மாநிலத்தின் மற்ற நகரங்களிலும் புத்தாண்டையொட்டி காவல்துறையினர் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தாண்டையொட்டி தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் வருடத்தின் 365 நாட்களை குறிக்கும் திருப்படி திருவிழா நிகழ்ச்சி சிறப்பு பூஜையுடன் இன்று தொடங்கியது.

இந்த விழாவில் கலந்து கொள்ள பல்வேறு இடங்களிலிருந்து திருத்தணிக்கு பக்தர்கள் வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தனசேகர் ) --51---- செகண்ட்*

[]<<<>>>[]

2024-25-ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் ஜனவரி 15-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக மத்திய நேரடி வரிகள் வாரியம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து தாமதமாக வருமான வரிக்கணக்கு தாக்கல் செய்வோர் மற்றும் திருத்தப்பட்ட கணக்குகளை தாக்கல் செய்வோருக்கு இரண்டுவார காலம் கூடுதல் அவகாசம் கிடைத்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நடப்பு ஆண்டு 33 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனவரி 15-ஆம் தேதி வரை மாநிலத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) -40----- செகண்ட்*

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாணவ மாணவிகளின் நலனை பாதுகாக்கும் பொருட்டு அரசு வழிகாட்டி விதிமுறைகளை பின்பற்றுதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தலைமையில் இன்று நடைபெற்றது.,

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ள வேட்டி சேலைகள் வைக்கப்பட்டுள்ள சிறுகாவேரிபாக்கம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

விடுதலைப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் நினைவு தினத்தையொட்டி மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் அன்னாரது நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள உருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி சங்கீதா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

[]<<<>>>[]

வைணவ திருத்தலங்களில் ஒன்றான மதுரை அருள்மிகு கூடலழகர் பெருமாள் திருக்கோவில் பகல் பத்து உற்சவம் இன்று கோலாகலத்துடன் தொடங்கியது.

[]<<<>>>[]

சென்னை மாவட்ட அளவிலான 2024-25-ஆம் ஆண்டிற்கான மாரத்தான் ஓட்டப்போட்டி அடுத்த மாதம் பத்தாம் தேதி நடைபெறும் என ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

விஜய் ஹஸாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் விதர்பா அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

விசாகபட்டினத்தில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த தமிழ்நாடு அணி 48 புள்ளி நான்கு ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 256 ரன் எடுத்தது.

257 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய விதர்பா அணி 43 புள்ளி ஐந்து ஓவரில் நான்கு விக்கெட்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

[]<<<>>>[]

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கேரளா இன்று மேற்குவங்க அணியை எதிர்கொள்கிறது

இப்போட்டி ஹைதராபாதில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

*End of News*